# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண். 168/2011</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. இராஜா முகம்மது, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 13 -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 13.12.2024**

**பெயர் - கருணா**

**த/பெ - முனுசாமி**

**சாட்சி - DW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 3.15. p.m.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

5. வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 109/1 பி ஆகும். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரனமாக 75 செண்ட் நிலம் பிராதில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் 66 செண்ட் நிலம் நான் வாங்கியுள்ளேன். நான் எந்த வருடம் வாங்கினேன் என்றால் 2000 வருடத்தில் வாங்கினேன். நான் சொத்தை வாங்கும்போது வில்லங்கம் போட்டு பார்த்ததாக கூறியுள்ள நிலையில் அந்த வில்லங்க சான்றிதழ் தேடி பார்த்தேனா என்றால் தேடி பார்த்தேன் கிடைக்கவில்லை. நான் வில்லங்க சான்றிதழை பார்த்திருந்தால் அதில் காசி பெயர் வந்திருக்கும் என்றும் அதை நீதிமன்றத்திலிருந்து மறைப்பதற்காகத் தான் அவ்வாவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்த பி.சா.ஆ1 ஆவணத்தில் சர்வே எண் 109/2 என உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ2 ஆவணத்தில் சர்வே எண் 109/1 பி பரப்பளவு 66 செண்ட் என உள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ-2 காசியால் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றால் பி.சா. ஆ-2 கிரைய ஆவணம் 1989 ஆவணம் ஆகும்.

அதில் காசி கையெழுத்து இட்டாரா, இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய கிரைய ஆவணம் 2000 வருடத்திற்கானது அதில் காசி கையெழுத்திட்டுள்ளார். காசி 1985-ல் வழக்கு சொத்தினை வாங்கியுள்ள நிலையில் 2000-ல் நான் அச்சொத்தினை வாங்கும்போது ஏன் காசியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆரவள்ளி மற்றும் அமிர்தம்மாள் ஆகியோரே சொத்தின் உரியைாளர்கள் அவர்களிடம் இருந்து தான் நான் மேற்படி சொத்தினை வாங்கினேன். காசியும் எனது கிரைய ஆவணத்தில் சாட்சி கையெழுத்திட்டுள்ளார். மேலும் 1989-ஆம் ஆண்டு கிரைய ஆவணத்தை மட்டுமே நான் எனது ஆவணத்தில் காண்பித்துள்ளேன்.

7. மேற்படி 1989 மற்றும் 1985-ஆம் வருடத்திய ஆவணங்கள் வில்லங்க சான்றிதழில் இடம் பெற்று இருக்கும் என்பதால் தான் அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1985-ல் சொத்தை வாங்கிய காசி இடமிருந்து நான் சொத்தினை வாங்காமல் 1989 வருடத்திய ஆவணத்தின் அடிப்படையில் நான் சொத்தை வாங்கியதால் எனது கிரைய ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. எனது கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதியான எனது மனைவி பெயருக்கு செய்த செட்டில்மெண்ட் ஆவணமும் செல்லாது என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் எனது தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் பி.சா.ஆ 1 முதல் 16 வரையிலான ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்- 3.19.p.m.**